Ti Ta
Nb Zr Ss
Ni Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
*An ISO 9001 : 2015 Company*

Tiaano® since '92
Innovation In Inert Metals

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2017-2018

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Jul.17 : 1043 Nos.
  - Up to Jun.17 : 1040 Nos.
- **Performance Aug. 17 ...**
  - Turnover growth : 11.33%
  - Employment growth : 7.74%
  - 100% Attendance : 15.03 %

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano® (Innovation In Inert Metals) – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil (Results for environment) – Water Treatment Equipments.

HydroGen™ Go Green – HHO Generators

Titanictrade (We Deliver Value Chain) – Portal for Exotic Metals

Tiaano Vidyashrm – Tiaano Vidyashram (CBSE Curriculum)




## ஆசை

ஓர் ஊரில் பணக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் பேராசை பிடித்தவன். மற்றவர்களிடம் இருப்பதை அபகரித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைபவன்.

அடுத்த ஊரில் ஏழை இளைஞன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் நல்ல புத்திசாலி, சுறுசுறுப்பானவன். அந்தப் பணக்காரனைப் பற்றிக் கேள்விப்பட்ட இளைஞன், அவனுக்கு நல்ல புத்தி கற்பிக்க வேண்டும் என்று நினைத்தான்.

ஒரு நாள், ஊரின் ஒதுக்குப்புறத்தில் அந்த இளைஞன் வந்து நின்றான். அப்போது நல்ல பனி வெடவெட வென்று நடுங்க வைக்கும் குளிர். இளைஞன் நின்று கொண்டிருந்த வழியாக அந்தப் பணக்காரன் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும், இளைஞன் தனது கையிலிருந்த வாத்திய கருவிகளை மீட்டத் தொடங்கினான். நிறைய கிழிசல்கள் கொண்ட சட்டையை அவன் அணிந்திருந்தான்.

ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருந்த இளைஞனுக்கு அருகே வந்தான், பணக்காரன். வெடவெடக்கும் குளிரில் தன்னை மறந்து இசை மீட்டிக்கொண்டிருக்கும் அவனைப் பார்க்க, பணக்காரனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்த கடுங்குளிரில் உன்னால் எப்படி இவ்வளவு ஆனந்தமாக இருக்க முடிகிறது? என்று கேட்டான் பணக்காரன். அதுவா? என்று அலட்சியமாகச் சிரித்தவன், நான் அணிந்திருந்த இந்த பொத்தல்கள் நிறைந்த சட்டை தான் காரணம்! இதன் ஒரு துவாரத்தில் உள்ளே நுழைகின்ற பனிக்காற்று மறுவினாடியே அடுத்த துவாரம் வழியே வெளியேறி விடுகிறது.

அத்துடன் இந்த சட்டை எனக்கு உற்சாகத்தையும் புதுத் தெம்பையும் தருகிறது! என்றான். பணக்காரனுக்கு அந்த சட்டையை எப்படியும் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை பிறந்தது. இந்த சட்டையை எனக்கு தந்துவிடு, நான் உனக்கு நிறையப் பணம் தருகிறேன் என்றான். இளைஞன் தனது தந்திரம் பலித்ததை எண்ணி மகிழ்ந்தான். " அதெல்லாம் முடியாது என்றான்.

"எனது குதிரையையும் தருகிறேன்" என்றான் பணக்காரன், ஒருவாறு இளைஞன் சம்மதித்தான். பணக்காரன் தன் கையிலிருந்த பணம் முழுவதையும் கொடுத்தவுடன், குதிரையையும் கொடுத்தான். பழைய கந்தல் சட்டையை இளைஞனிடமிருந்து வாங்கிக் கொண்டான். ஏழை இளைஞன் அங்கிருந்து புறப்பட்டுப் போனான். தான் ஏமாந்து போனதைப் பணக்காரன் நீண்ட நேரத்திற்குப் பிறகே உணர்ந்து கொண்டான்.

நண்பர்களே! ஆசைதான் எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. ஆகவே நம்முடைய வாழ்க்கையில் ஏழைகளை கொள்ளையிடாதபடி, ஒவ்வொரு படியிலும் ஜாக்கிரதையுள்ளவராக இருக்க வேண்டும்.

Compiled By : Ms. P.E Nancy
Director - Admin

## FUNCTIONAL WISHES




**HappyBakrid**
(September 3rd)




**Happy Ayyudha Pooja & Vijayadhasami**
**(September 29th & 30 th)**

**Best Wishes from Tiaano Employees**

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!

Mr. Chinnathambi.N — 16thSep.
*Coating*
Mr. Suresh Kumar.K — 19th Sep.
*Production*
Mr. Govintharajan. — 20th sep.
*Facilitation*
Mr. Dinoy.P — 29th Sep.
*Coating*



**Best Wishes from Tiaano Employees**

### பொன் மொழிகள்

- அமைதியை விட மேலான மகிழ்ச்சி வேறெதுவுமில்லை.
- பொருளற்ற சொற்களால் ஆக்கப்பட்ட கவிதைகள் ஆயிரம் இருந்தாலும் பொருள் உள்ள கவிதையின் ஒரே சொல் மேலானது.
- தீய எண்ணத்துடன் ஒருவன் பேசினாலும் செயலில் இறங்கினாலும், வண்டியை இழுக்கும் மாட்டின் காலை வண்டிச்சக்கரம் பின்பற்றிச் செல்வது போல துன்பம் அவனைப் பின்பற்றிச் செல்கிறது.
- அதிகமாக பேசுவதானால் மட்டும் ஒருவன் அறிஞன் ஆகி விடமாட்டான்.

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

அந்தப் பெண்ணுக்கு நடுத்தர வயது வாழ்வில் எதிலுமே பிடிப்பின்றி இருந்தார். வீடு முழுவதும் இருளடைந்து– தூசுபடிந்து கிடந்தது. அந்தப் பெண்ணின் ஒரே பற்றுக்கோடு, பக்கத்து வீட்டுக் குழந்தை.

ஒரு நாள் அந்த குழந்தை அழகிய ரோஜா ஒன்றைக் கொண்டு வந்து தந்தது. மிகவும் மகிழ்ந்த அந்த பெண், ரோஜாவை வைக்க பூ ஜாடியை எடுத்தார். அதன் தூசைத் துடைத்து மேசையில் வைத்தார். மேசை குப்பையாய் இருந்தது. மேசையைத் தூய்மைச் செய்தார். அந்த அறை இருளாய் இருப்பதை உணர்ந்து திரைச்சீலை விலக்கி விளக்கு பொருத்தினார். பிறகு வீட்டுக்கே வண்ணம் பூசினார். கலகலப்பு நிறைந்த மனிதராய் மாறினார்.

அன்புடன் கொடுக்கும் எதுவும் இந்த அபாரமான மாற்றத்தை ஏற்படுத்த வல்லது.

–கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

### ஒரு தாயின் சக்தி

வில்மா ரூடால்ப் என்ற சிறுமிக்கு நான்கு வயதில் நிமோனியா வந்து இடது கால் செயலிழந்து விட்டது. டாக்டர்கள் இனி “வாழ்நாள் முழுவதும் அந்தக் காலை பயன்படுத்த முடியாது” என்று கூறி விட்டனர். பிறகு ஒரு நாள் முழுவதும் இரவு கண் கலங்கத் தன் தாயிடம் சென்று “இனி என்னால் நடக்க முடியாதம்மா?” என்றாள் வில்மா.

நெகழ்சியுடன் அவளை இறுக அணைத்துக் கொண்ட தாய், “அதையெல்லாம் நீ நம்பாதே. நான் சொல்கிறேன். நிச்சயமாக உன்னால் நடக்க முடியும். ஏன்? ரன்னிங் ரேஸ் கூட ஓட முடியும்” என்றாள். தாயை முழுக்க நம்பிய வில்மா தன் காலில் சிகிச்சைக்காகப் பிணைக்கப்பட்டிருந்த இரும்பு வளையத்தைக் கழற்றி எறிந்து விட்டு தினம் நடந்து பழகினாள். பள்ளியின் ஸ்போர்ட்ஸ் டேயில் கலந்து கொண்டு ஓடி கடைசியாக தான் வந்தாள். அம்மா பக்கம் திரும்பி பார்த்தாள் கவலைப்படாதே! தொடர்ந்து ஓடு ஃபர்ஸ்ட் வருவே! என்றே வார்த்தைகள் வருகிறது. வில்மா தன் தாயை பிடிவாதமாக நம்பி மீண்டும் ப்ராக்டிஸ்!

1960 ஒலிம்பிக்ஸில் நூறு மீட்டர், இரு நூறு மீட்டரிலும், நானூறு மீட்டரிலும், ரிலே ஓட்டப்பந்தயத்திலும் தங்க மெடல்கள் வாங்கும் வரை வில்மா விடவில்லை. தாய் என்கிற அந்த இரண்டெழுத்துக்கு ஒலிம்பிக்ஸ் சக்தி உண்டு!

### பணிவு வேண்டும்

மிகப் பெரிய கடல். கடலருகே செல்கின்றோம். கடல் தனது அலையாகிய அன்புக் கரங்களை நீட்டிப் பணிந்து காலைத் தொட்டு வணங்கி நிற்கின்றது. மிகப் பெரிய கடலே நம்மை பணிகின்றது என்ற இறுமாப்புடன் கடலினூடே சென்றால் விளைவு விபரீதமாகும். அதைப் போலவே பெரியோர் நம்மைப் பணிந்து நிற்கும் தறுவாயில் அவர்களை மதியாமல் சென்றால் விளைவு.......!

RESPECT ELDERS ALWAYS

திருச்சிராப்பள்ளி ஸ்ரீஐயப்ப சங்கம் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

## தெரிந்து கொள்வோம்

## Health Benefits of Watermelon

- Highest Alkalising Fruit.
- Reduces High Blood Pressure.
- Reduce Heart Disease Risk.
- Reduce Blood Sugar level.
- High water Content (92%)
- Boosts immune system.
- Strengthens Bones.
- Produces Energy.
- Cleans Kidneys.
- Fights Cancer.

**முருங்கை கீரையின் பயன்கள்**

- முருங்கைஇலையில் பாலடையை விட 2 மடங்கு புரோட்டீன் உள்ளது. ஆரஞ்சைவிட 7 மடங்கு வைட்டமின் சி உள்ளது. வாழைப்பழத்தை விட 3 மடங்குப் பொட்டாசியம் உள்ளது. கேரட்டை விட 4 மடங்கு வைட்டமின் ஏ இருக்கிறது. பாலை விட 4 மடங்கு கால்சியம் உள்ளது. உடலுக்கு தேவையான அனைத்து ஊட்டசத்துகளையும் முருங்கைஇலைக் கொண்டுள்ளது.
- முருங்கைகீரையை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் பித்தமயக்கம், மலச்சிக்கல், கண்நோய், கபம், மந்தம் போன்றவை குணமாகும்.
- உடல் சூடு அதிகம் உள்ளவர்கள் வாரத்தில் இரண்டு முறை முருங்கைகீரை சாப்பிட்டு வர உடல் சூடு தணியும்.
- முருங்கைகீரையை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் இரத்த சோகை வராமல் தடுக்கலாம்.
- முருங்கைஇலை சாறு இரத்தத்தை சுத்தம் செய்வதோடு, எலும்புகளையும் பலப்படுத்தும்.
- உடல் அழகும் பலமும் கூடும். தோல் வியாதிகள் நீங்கும்.
- ஆஸ்துமா, மார்பு சளி, சைனஸ் போன்ற சுவாச கோளாறுகளுக்கு முருங்கைகீரை ரசம் அல்லது சூப் நல்ல பலன் தரும்
- பித்த மயக்கம், கண் நோய் சொரிய மந்தம் முதலியவை நீங்கும்.

*Collected From Internet*

**அனுபவமும், படிப்பறிவும்**

படிப்பறிவு இல்லாத, உலக விஷயங்கள் புரியாத கிராமத்து ஆசாமி அவன். உள்ளூர் பேக்கரி ஒன்றில் பல ஆண்டுகள் பணி புரிந்த அனுபவத்தை வைத்து, சொந்தமாக பேக்கரி திறந்தான். கேக்குகள், பிஸ்கட்டுகள் என எல்லாவற்றிலும் புதுப்புது ரகங்களை அறிமுகம் செய்ததால் அவன் கடையில் கூட்டம் குவிந்தது.

பெரிய நகரை ஒட்டிய அவனது கிராமத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் பலவும் கால் பதித்தப் போது, அந்த ஊழியர்களின் தேவைக்காக பீட்ஸா, பர்கர் என்று தயாரித்தான். உள் அலங்காரம், ஏர் கண்டிஷன் என்று கடையை நவீனப்படுத்தினான். படிக்காதவனாக இருந்தாலும், நுனிநாக்கு ஆங்கிலம் பேசும் விற்பனை பிரதிநிதிகளை வேலைக்கு அமர்த்தினான். வாடிக்கையாளர்கள் குவிய வேண்டும் என்பதற்காக தள்ளுபடிப் போன்ற சலுகைகளை அறிமுகம் செய்தான்.

வெளிநாடு சென்று பிஸினஸ் நிர்வாகம் படித்த அவனது மகன் ஒரு நாள் நாடு திரும்பினான். அப்பாவின் கடையைப் பார்த்து அதிர்ந்துப் போனான். “என்னப்பா இது நீ பேப்பரே படிப்பதில்லையா? அமெரிக்காவில் ஆரம்பித்து உலகம் முழுவதும் பொருளாதார தேக்க நிலை உள்ளது. மக்கள் செலவழிக்கவே பணமின்றி தவிக்கிறார்கள். எல்லா நிறுவனங்களிலும் ஆட்களை வீட்டுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். உலகமே சிக்கனமாக இருப்பது எப்படி என்று கற்றுக் கொண்டு வருகிறது. நீ என்னடாவென்றால் சலுகை, தள்ளுபடி என்று காசை கரியாக்குகிறாயே” என்று கோபித்துக் கொண்டான்.

வெளிநாடுப் போய் படித்த பையன் சொல்வது சரியாகத் தான் இருக்கும் என்று அப்பா நம்பினார். தள்ளுபடிகளை நிறுத்தினார். கடையை அலங்கரிப்பதை நிறுத்தினார். வேலைக்கு நியமித்த ஆட்களைக் குறைத்தார். வெரைட்டி தருவதையும் நிறுத்தினார். வாடிக்கையாளர்கள் சுவாரசியம் இழந்து கடைக்கு வருவதை நிறுத்தி கொண்டனர். நாளடைவில் கடையை மூட வேண்டிய கட்டாயம் வந்தது. அப்போதும் கூட “பொருளாதார தேக்க நிலையால் கடையை மூட வேண்டி நேர்ந்ததாக” அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

**அனுபவம் படிப்பறிவும் ஒன்றுக்கு ஒன்று முரண்படக் கூடாது!**

*Collected From Internet*

### Teacher

There is a story about a king in ancient times who wanted to honour a person who made world the greatest contribution to society. All kinds of people came, including doctors and entrepreneurs, and they all presented their cases for receiving the honour. The king was not impressed. Finally an elderly person with a glow on his face walked in and said he was a teacher. The king came down from his throne and bowed to honour the teacher. It is the teacher who makes the higest contribution in shaping the future of society.

## கவிதைகள்

### மழைநீர்

பல்லாயிரம் நெஞ்சங்களை ஆனந்தத்தில்
திழைக்க செய்கின்ற ஆனந்த நீர் நீ!
மண்ணை செழிமை படுத்துகிற
வலிமை நீர் நீ!
தாவரங்களுக்கு உயிர் கொடுக்கின்ற
அன்னை நீ!
வறண்ட குளம், குட்டைகளுக்கு பெயர்
சூட்டுகின்ற தந்தை நீ!
பூமியால் கொடுக்க முடியாத வானத்தில்
தோன்றுகின்ற அன்பின் பொக்கிஷம் நீ!

### பிரிவு

பிரிவின் வலி அறிந்து தான் இரவும்
பகலும் இணையாமல் இருக்கிறதோ!
அறிவு அறிவதையெல்லாம் மனம் ஏற்றுக்
கொள்வதில்லை, அது போல தான்
நம் பிரிவும்.

Collected From Internet

## ஹைக்கூ

### ஒத்திகை

**ஒத்திகைப் பார்க்காத நடனம்...**
**குழந்தையின் நடை....**

## சிந்தனைக்கு

என் மகிழ்ச்சியை பார்த்து என்னை தீர்மானித்து விடாதீர்கள்...

உங்களால் நினைத்து பார்க்க முடியாத சோகங்கள் எனக்கும் உண்டு...

நண்பன் வெற்றி பெறும் போது "அவன் என் நண்பன்" என பெருமைக் கொள்!!!!

தோல்வி அடையும் போது " நான் உன் நண்பன்" என அவன் அருகில் நில்.

Collected From Internet

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி LXIII)

### அழுக்கு எது? சுத்தம் எது?

முதல் வேலையாக, சுத்தம் செய்கிற பையன்களை உட்கார வைத்து, "தம்பிகளா, கம்ப்யூட்டரைத் தொட்டால் ஷாக் அடிக்காது. நாள் முழுவதும் அதைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சாத குறையாக சல்லாபம் செய்கிறவர்களெல்லாம் இருக்கிறார்கள். ஆகவே, பயப்படாமல் அதைத் தொட்டுச் சுத்தம் செய்யுங்கள்" என்று தெளிவாக சொல்ல வேண்டும்.

வெறுமனே சொன்னால் மட்டும் போதாது. இதற்குத் தேவையான கருவிகள், உபகரணங்களையும் அவர்களுக்கு கிடைக்க செய்ய வேண்டும். அப்போது தான் அவர்களால் இந்தப் பணியைச் சரியாகச் செய்ய முடியும்.

உதாரணமாக, கணினியின் நுணுக்கமான பாகங்களைச் சுத்தம் செய்வதற்குச் சில உபகரணங்கள் இருக்கின்றன. கீபோர்டின் இண்டு இடுக்குகளில் கூட நுழைந்து சுத்தப்படுத்துகிற விசேஷ பிரஷ்கள், சிறிய அளவு வாக்குவம் க்ளீனர்கள் உண்டு. இதே போல், தொட்டாற்சிணங்கி குடும்பத்தின் டிஜிட்டல் வடிவங்களான கணினித் திரைகளைச் (மானிட்டர்) சாதாரணமாகத் துணியால் துடைக்கும் போது, சில கீறல்கள் விழ வாய்ப்பு உண்டு. இதைத் தவிர்ப்பதற்கான, மெத்மெத் விசேஷத் துணிகள், பிரஸ்கள் கிடைக்கின்றன.

( தொடரும்)



Certificate

Breakthrough Management Quality Registrar (BMQR)

Certifies that the Quality Management System of

TI ANODE FABRICATORS PVT. LTD.
No: 48, Noothanchery, Madambakkam, Chennai – 600 126.
Tamilnadu, India.

has been assessed and found to be in accordance with the requirements of the quality standards

ISO 9001:2015

for the following scope of certification

DESIGN, MANUFACTURING, SUPPLY, INSTALLATION AND COMMISSIONING OF...
- ELECTROCHLORINATOR, SCALE REMOVER, OXY – HYDROGEN GENERATOR, HYDROGEN GENERATOR AND THEIR ELECTROLYZERS
- MMO AND PLATINISED TITANIUM & NIOBIUM DIMENSIONALLY STABLE ANODES
- CHEMICAL PROCESS EQUIPMENTS FROM TITANIUM, TANTALUM, NIOBIUM, ZIRCONIUM, NICKEL, DUPLEX STEEL & THEIR ALLOYS
- TURNKEY PROJECTS, PRODUCTION OF CHEMICALS BY ELECTRO CHEMICAL TECHNOLOGY, PROJECTS VIZ; CHLORATE, PERCHLORATE, IODATE, BROMATE, CHLORINE, CHORINE DIOXIDE ETC.,

Further clarifications regarding the scope of this certificate and applicability of ISO 9001:2015 requirements may be obtained by consulting the organization.

| | |
|---|---|
| Original Certification Date | : 08/07/2008 |
| Current Certification Date | : 31/07/2017 |
| Seventh Surveillance Due on | : 28/07/2018 |
| Eighth Surveillance Due on | : 28/07/2019 |
| Certificate Expiration Date | : 28/07/2020 |

Surveillance Audit
Due On 28/07/2018 Due On 28/07/2019
This certificate is invalid if surveillance audit is not completed

BMQR ISO 9001 CERTIFIED
AIAO-BAR QMS ACCREDITED USA

Certificate No: AB09IS12851/R1

For BMQR
No:5, 2nd Floor, Sathyamoorthy Road, Thiruvalleeswarar Nagar, Thirumangalam,
Anna Nagar West, Chennai - 600 040. Tamilnadu, India.
email: iso@bmqr.com, Web : www.bmqr.com
PH- 044-26152595

The certificate will remain current subject to the company maintaining its system to the required standard(s). This will be monitored regularly by BMQR Certifications Pvt. Ltd., This Certification details and effectiveness are listed at www.bmqr.com. Registration does not assure the quality of products produced by a Quality System. This Certificate is granted based on the limited sampling audit as per ISO 19011:2011 and BMQR is not responsible for client's failure to maintain documented quality system. This certificate is the property of BMQR Certifications Pvt. Ltd, and to be returned upon request.